மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 194/2013 | சாட்சி | பி.வா.சா.2 |
| பெயர் | அமுதா | நாள் | 03.02.2025 |
| கணவர் பெயர் | ஆறுமுகம் (எ) சேகர் | | |

**வாதிகள் தரப்பில் பி.வா.சா.2 ஐ குறுக்கு விசாரணை தொடர்ச்சி:-**

14) சிந்தாமணியூர் செல்லும் தார் சாலையானது தென்வடலாக செல்கிறது என்றால், சரிதான். மேற்படி தார் சாலைக்கு மேற்குபுறமாக பெரியண்ணன் என்பவரின் கூரை வீடும், நிலமும் உள்ளது என்றால், கூரை வீடு அல்ல. வில்லை வீடு தான் உள்ளது. மேற்படி வீடும், நிலமும் ச.எண்.248/1A3 ல் உள்ளது என்றால், சரிதான். மேற்படி பெரியண்ணனின் வீட்டிற்கு தெற்கில் சேகரின் தொகுப்பு வீடு உள்ளது என்றால், சரிதான்.

15) மேற்படி சேகர் வீட்டிற்கும் தெற்கில் தான் 10 அடி அகல நடைபாதை உள்ளது என்றால், அது 10 அடி அகலம் இருக்காது, சுமார் 2 அல்லது 3 அடி அளவில் நடந்து செல்லும் பாதைதான் உள்ளது. மேற்படி பெரியண்ணன், சேகர் வீடுகளுக்கு மேற்கில் கல்கட்டு உள்ளது என்றால், உள்ளது. மேற்படி கல்கட்டு தென்வடலாக ச.எண்.248/1A3 ன் வடபுறத்தில் ஆரம்பித்து, தெற்குபுறத்தில் மேற்படி நான் பாதை என கூறும் பகுதி வரை நீளமாக வருகிறது என்றால், சரிதான்.

16) அதற்கு மேற்கில் தென்வடலாக சுமார் 4 அடி அகலத்தில் மண் பாதை உள்ளது என்றால், இல்லை. மேற்படி நான் 2 அல்லது 3 அடி நடைபாதை என சொல்லும் நிலத்திற்கு வடக்கில் சேகரின் கூரை வீடு உள்ளது என்றால், சரியல்ல. மேற்கில் தான் உள்ளது. மேற்படி சேகரின் கூரை வீட்டிற்கு தெற்கில் என்ன உள்ளது என்றால், நான் கூறிய 2 அல்லது 3 அடி நடைபாதை தான் உள்ளது. மேற்படி சேகரின் வீட்டிற்கு வடக்கு புறம் சுப்ரமணியம் என்பவரது வில்லை வீடு உள்ளது என்றால், சரிதான். மேற்படி சுப்ரமணிம் வீட்டிற்கு கிழக்கு புறமாக மின் கம்பம் உள்ளது என்றால், சரிதான்.

17) மேற்படி மின் கம்பத்திற்கும், கல்கட்டுக்கும் நடுவே காலி நிலம் உள்ளதா என்றால், உள்ளது. மேற்படி சிந்தாமணியூர் செல்லும் மெயின் ரோட்டை ஒட்டி மேற்கு புறமாக ஒரு மின் கம்பம் உள்ளது என்றாலும், மேற்படி மின் கம்பத்திற்கு மேற்கில் மற்றொரு மின் கம்பம் உள்ளது என்றாலும், அது எங்களது வீட்டிற்கு கிழக்கில் உள்ளது என்றாலும், மேற்படி மின் கம்பங்களின் வழியாகத்தான் எங்கள் தொகுப்பு வீட்டிற்கு மின்சார இணைப்பு உள்ளது என்றாலும், சரிதான்.

18) மேற்படி எங்கள் வீட்டை ஒட்டியுள்ள மின் கம்பத்தின் வழியாகத்தான் மேற்கிலுள்ள சுப்ரமணியத்தின் வீட்டிற்கு மின் கம்பம் செல்கிறது என்றால், சரிதான். மேற்படி சுப்ரமணித்தின் வீட்டிற்கு வடக்கு புறமாக, கல்கட்டிற்கு மேற்குபுறமாக ஒரு பிய்ய மரம் உள்ளது என்றால், இல்லை. மேற்படி பிய்ய மரத்திற்கு வடக்கு புறம் ஒரு புளிய மரம் உள்ளது என்றால், இல்லை. மேற்படி சுப்ரமணிம் வீட்டிற்கு எந்த பக்கத்தில் பெரியண்ணன் வீடு உள்ளது என்றால், வடக்கில் உள்ளது. மேற்படி வடக்கில் பெரியண்ணனுக்கு எத்தனை வீடுகள் உள்ளது என்றால், இரண்டு வீடுகள் உள்ளது.

19) எங்களுடைய கூரை வீடும், சுப்ரமணித்தின் வில்லை வீடும், பெரியண்ணனின் வில்லை வீடுகளும் ச.எண்.248/1B ல் உள்ளது என்றால், சரிதான். மேற்படி எங்களது கூரை வீடு எந்த பக்கத்தில் வாசல் உள்ளது என்றால், கிழக்கு பக்கத்தில் வாசல் உள்ளது. சுப்ரமணியன் வில்லை வீட்டிற்கு வாசல் எந்த பக்கம் உள்ளது என்றால், கிழக்கு பக்கம் தான். சுப்ரமணியம் வில்லை வீட்டிற்கு வடக்கில் பெரியண்ணனுக்கு உள்ள வில்லை வீட்டிற்கு எந்த பக்கம் வாசல் உள்ளது என்றால், கிழக்கில் தான் உள்ளது. மேற்படி வீட்டிற்கு மேற்கில் அமைந்துள்ள பெரியண்ணனின் மற்றொரு வில்லை வீட்டிற்கு எந்த பக்கம் வாசல் உள்ளது என்றால், அதுவும் கிழக்கில் தான் உள்ளது.

20) ச.எண்.248/1A3 ல் எங்களுக்கு உள்ள தொகுப்பு வீட்டிற்கு எந்த பக்கம் வாசல் என்றால், கிழக்கு பக்கம் தான். ச.எண்.248/1A3 ல் வடக்கு பக்கம் பெரியண்ணனுக்கு உள்ள கூரை வீட்டிற்கு எந்த பக்கம் வாசல் என்றால், தெற்கு பக்கம் தான் வாசல் உள்ளது. ச.எண்.248/1B க்கு எந்த பக்கம் ச.எண்.248/1A2 உள்ளது என்றால், அது குறித்து எனக்கு தெரியவில்லை. ச.எண்.248/1B ல் பெரியண்ணனுக்கு உள்ள வில்லை வீடுகளுக்கு எந்த பக்கம் கந்தசாமியின் கூரை வீடுகள் அமைந்துள்ளது என்றால், வடக்கில் உள்ளது. மேற்படி கந்தசாமியின் வீட்டிற்கு எந்த பக்கம் வாசல் என்றால், தெற்கு பக்கம் தலைவாசல் உள்ளது.

21) மேற்படி கந்தசாமியின் வீடு அமைந்துள்ள பகுதியில் மூங்கில் மரங்கள் உள்ளது என்றால், சரிதான். மேற்படி மூங்கில் மரங்களுக்கு நேர் வடக்கில் குழந்தைபையனின் தொகுப்பு வீடு உள்ளது என்றால், சரிதான். ச.எண்.248/1A3 ல் அமைந்துள்ள பெரியண்ணனின் கூரை வீட்டிற்கு வடக்கு பக்கத்தில் ஒரு மின் கம்பம் உள்ளது என்றால், சரிதான். குழந்தைபையனின் வீட்டிற்கு கிழக்கு பக்கத்தில் ஒரு மின் கம்பம் உள்ளது என்றால், அது குறித்து எனக்கு தெரியவில்லை. மேற்படி குழந்தைப்பையனின் வீட்டிற்கு எந்த பக்கம் தலைவாசல் என்றால், கிழக்கு பக்கம் உள்ளது. மேற்படி குழந்தைபையனின் வீட்டிலிருந்து சுமார் 5 அடி தூரத்திலேயே ஒரு மின்சார கம்பம் உள்ளது என்றாலும், அதிலிருந்தே அவரது வீட்டிற்கு மின்சாரம் செல்கிறது என்றாலும், சரிதான்.

22) மேற்படி குழந்தைபையனின் தொகுப்பு வீட்டிற்கு வடக்கில் ஆறுமுகத்தின் தொகுப்பு வீடு உள்ளது என்றால், தொகுப்பு வீடு ஒன்றும், வில்லை வீடு ஒன்றும் உள்ளது. மேற்படி இரு வீடுகளுக்கும் எந்த பக்கம் தலைவாசல் என்றால், கிழக்கு பக்கம் தான் தலைவாசல் உள்ளது. மேற்படி ஆறுமுகத்தின் தொகுப்பு வீட்டிற்கு வடக்கில் பழனியின் கூரை வீடு உள்ளது என்றால், சரிதான். மேற்படி பழனியின் கூரை வீட்டிற்கு மேற்கு புறமாக பழனியின் அட்டை வீடு ஒன்று உள்ளது என்றால், மேற்படி இரு வீடுகளுக்கும் எந்த புறம் தலைவாசல் என்றால், கிழக்கு புறம் தலைவாசல் உள்ளது.

23) மேற்படி அனைவரும் கிழக்கு புறமாக கல்கரையை ஒட்டி அமைந்துள்ள 4 அடி அகல மண் பாதை வழியாகத்தான் தென்வடலாக செல்லும் 10 அடி அகல மண் பாதை வழியாக சிந்தாமணியூர் செல்லும் தென்வடல் சாலையை அடைகிறார்கள் என்றால், சரியல்ல.

(வாதிகள் தரப்பில் கேட்டுக்கொண்டதற்கிணங்க பி.வா.சா.2 ஐ குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)

ஒம்/–திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.